(ஆ) பொதுக்கூட்டத்தில் சமூக நலத்துறை அமைச்சர் வெளியிட்ட ஒரு கருத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே ஜேம்ஸ் அவர்கள் கீழ்க்கண்ட அவையுரிமைபற்றிய பிரச்சினையை எழுப்ப அனுமதி கேட்டுள்ளார்.

"On 21st July 1977 the Hon. Minister for Social Welfare has said in a public meeting at Vannia Teynampet, Thiru V. K. Nagar, that " மந்திரி பதவி எம்.ஜி.ஆர். போட்ட பிச்சை ".

disrespecting and dishonouring this House and refuting the responsibilities and liabilities to this House under the provisions of the Constitution and this has been published in local dailies such as "Navasakthi" dated 21st July 1977.

Thus the Minister for Social Welfare has committed the breach of privilege of this House."

என்று கொடுத்திருக்கிறார்கள்.

இது எப்படி அவை உரிமை மீறியதாகும் என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நான் எனது தீர்மானத்தில் கொடுத்திருப்பதுபோல் மாண்புமிகு சமூக நல அமைச்சர் பொதுக் கூட்டத்தில் மந்திரி பதவி எம்.ஜி.ஆர். போட்ட பிச்சை என்று கூறியிருக்கிறார்கள். மந்திரி பதவியைப்பற்றி, மந்திரி சபையைப்பற்றி அரசியலமைப்பில் கான்ஸ்டிட்யூஷன் ஆப் இண்டியாவில் ஆர்டிகிள் 163 முதல் 165 வரையிலும் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9-30)

I will read out the relevant portion . .

'*Article* 163—(1). There shall be a Council of Ministers with the Chief Minister at the head to aid and advise the Governor in the exercise of his functions, except in so far as he is by or under this Constitution required to exercise his functions or any of them in his discretion . .

ஆக மந்திரி பதவி என்பது ஒரு முதலமைச்சர் இன்னொருவருக்குக் கொடுக்கின்ற பிச்சை அல்ல என்பதனை இந்த அரசியல் சட்டம் தெளிவாக விளக்குகிறது. அதோடு இந்த அவையில் இருக்கின்ற அனைத்து அங்கனத்திர்களுக்கும் மந்திரி ஆவதற்குள்ள உரிமை அவையில் இருக்கின்றவர்களுக்கும் அவையில் இல்லாதவர்களுக்கும்

1977 ஜூலை 28]   [திரு. ஜே. ஜேம்ஸ்]

இருக்கிறது. ஆனல் இது ஒரு அங்கத்தினருடைய உரிமையே தவிர அங்கத்தினருக்கு இன்னொருவரால் ஒரு பிச்சையாக வழங்கக் கூடிய பதவி அல்ல என்பதனை மாண்புமிகு தலைவரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதோடு

'*Article* 164.—(1) The Chief Minister shall be appointed by the Governor and the other Ministers shall be appointed by the Governor on the advice of the Chief Minister, and the Ministers shall hold office during the pleasure of the Governor . . .

The Council of Ministers shall be collectively responsible to the Legislative Assembly of the State . . ."

நான் இதை எதற்காகக் கூறுகிறேன் என்றல் இது பிச்சை போடக் கூடிய அந்த அளவிற்கு இழிவான (மணியடிக்கப்பட்டது) நான் சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன், டீடெயிலாகச் சொல்ல வேண்டுமென்று நினைக்கவில்லை.

Regarding appointment of Ministers, the Chief Minister will be appointed by the Governor and the Council of Ministers also will be appointed by the Governor. The appointment of other Ministers is not made by Chief Minister. The only responsibility given to the Chief Minister is that he could advise the Governor to appoint other Ministers. So he is only an advisory person as far as appointment of other Ministers are concerned. So my submission is that as far as the Social Welfare Minister is concerned, what she has said is totally wrong. The appointment of Ministers is left to the Governor and he makes the appointment, according to the Constitution. So, what the Social Welfare Minister has said about Ministership is totally wrong and what she has said is a dishonour to this House and members of the House.

அம்மையார் அவர்கள் இதனை எந்த அளவிற்கு இழிவாக நினைத்து விட்டார்கள் என்பதைப் பார்க்கும்பொழுது இந்த அவையில் இருக்கின்ற மாண்புமிகு அங்கத்தினர்கள் 234 அங்கத்தினர்கள் மட்டுமல்ல, இந்த மாநிலத்தில் இருக்கின்ற 4 1/2 கோடி மக்களுக்கும் உரிமை உள்ள அந்தப் பதவியை ஏதோ பிச்சையாக வழங்கும் நிலையில் கொண்டு வந்து விட்டார்களே என்பது ஒன்று. இன்னொன்று, எந்த முதலமைச்சருக்கும் எந்த உரிமையும் இல்லாமல் இருக்கும்பொழுது இவ்வளவு பெரிய உத்தரவாதத்தை அவர்மீது வைத்திருக்கிறார்களே என்பது. எனக்குத் தோன்றுவதெல்லாம், ஒரு முதலமைச்சரை personality cult என்ற அளவிற்கு கொண்டு போய் நாட்டில் நிலைமைகள் மோசமாகி விட்டது. இது அவையை அவமதித்ததாகும் என்று கருதி

breach of privilege of the House என்று சுருக்கமாகச் சொல்லி, இன்னும் பல கருத்துக்கள் கூற வேண்டும், எனினும் அவைத் தலைவரவர்கள் சுருக்கமாகக் கூற வேண்டுமென்று சொல்வதால் இதோடு நிறுத்திக் கொள்கிறேன். ஆக, இந்த உரிமை மீறல் பிரச்னையை உரிமைக்குழு இன்னும் நியமிக்கப்படவில்லை என்றாலும், நியமிக்கப்படவிருக்கும் குழுவுக்கு இதை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. THIRU K. MANOHARAN : Mr. Speaker, Sir, for the time being I am not entering into the merits of the case. The hon. Member, Thiru Jame's interpretation, according to me, is a deliberate mis-interpertation of the Article of the Constitution. The Article is this :—

"The Chief Minister shall be appointed by the Governor and other Ministers shall be appointed by the Governor on the advice of the Chief Minister and the Minister shall hold office during the pleasure of the Governor". This explains very clearly that the Chief Minister has got every right to recommend his own Cabinet colleagues. The moment the Chief Minister feels a particular colleague has lost his confidence, he can very well ask the Governor to drop the Minister from his Cabinet. According to Mr. James, the Chief Minister is helpless and he has no right and he cannot have the capacity to do anything according to his own interpretation. My humble submission is that the Chief Minister is all powerful. On the advice of the Chief Minister, Ministers are appointed and at any time a colleague loses his confidence, the Chief Minister can drop the particular Minister from the Cabinet like a hot potato. The hon. Member"s interpretation of the Article of the Constitution, I am sorry to submit, is a deliberate misleading of the House.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜே. ஜேம்ஸ் : Just a word by way of reply. தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை ஒரு விவாதப் பொருளாக ஆக்காமல் சுருக்கமாகச் சொல்லுங்கள். அவர் கருத்தைச் சொன்ன பிறகு...............

திரு ஜே.ஜேம்ஸ் :—தலைவர் அவர்களே, I am entitled to reply நான் முன்னவர்...............

Mr. Speaker : No reply you can only to clarifiy. Please clarifiy.

திரு. ஜே. ஜேம்ஸ் : I am going to clarify all the mistaqes committed by the Hon. Minister for Finance. மாண்புமிகு அவை முன்னவருடைய ஆர்குமெண்ட்டை நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்ருலும் முன்னவர் என்ற முறையில் கொடுக்கக்கூடிய மரியாதையை நான் கொடுக்கிறேன். ஆனுல், அரசியல் சட்டத்தைப் பற்றி அன்னருக்கு இருக்கிற அறிவை நான் குறைத்துக் கூறவில்லை. அவர் கொண்டிருக்கிற கருத்து தப்பு என்பதனை நான் சொல்லாமல் இருக்க முடியாது. ஏனென்ருல் முதலமைச்சரவர்கள் ஆல் பவர்ஃபுல் என்று சொன்ஞர்கள்.

He is not all powerful. He has no authority at all. The Chief Minister cannot continue as Chief Minister if the Governor feels otherwise if the Governor feels that the Chief Minister has lost cenfidence of the House, he can dismiss the Chief Minister and other Ministers. Another aspect is even if the Chief Minister feels that he does not want a particular Minister, he cannot dismiss him Only the Governor can dismissa Minister.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வைத்துக் கொண்டு பார்த்தால் அந்தச் சட்டத்திலே ஒரு பிரிவு ஒன்றைப் பாதுகாக்கும், ஒன்றைப் பாதுகாக்காது என்பது தெரியவரும். ஒரிடத்திலே முதலமைச்சருக்கு அதிக அதிகாரம் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கும், மறு பக்கத்திலே நருக்கு அதிக அதிகாரம் இருக்கிறது என்றிருக்கும். அது பாதுகாப்புக்காகவும் நாட்டுநலனுக்காகவும் வைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் இதுவரையிலே 'டச்' பண்ணுங்கள். அது போதும்.

Thiru J. JAMES : I will only touch upon what the Hon. Finance Minister has touched. I will confine myself to those points. What I say is, even if a Chief Minister wants to dismiss a particular Minister, he cannot do it. He has only the power to recommend to the Governor. Only if the Governor wants to drop the Minister, he can dismiss the Minister. The Chief Minister cannot do it. He is helpless. That is the position, helpless position of the Chief Social Minister. When the position is like that, how can the Minister for Welfare can say that the Chief Minister has got all powers when accordingto the Constitution the position is otherwise.

The Hon. Thiru K. MANOHARAN : The Chief Minister has no power to dismiss a Minister, I do agree

1977 ஜூலை 23]

THIRU J. JAMES : I am only touching upon relevent facts. I hope other Members can understand them clearly. What happened on January 31, 1976 ?..

(திரு. ரா. மார்க்கபந்து எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சீக்கிரம் முடித்தால் நலம். ஒவ்வொருவரும் எழுப்புகிற பிரச்சினையாக இது வருகிறது. உங்களுடைய உரிமை மீறல் பிரச்னையை நீங்கள் கிளாரிபை பண்ணி உட்கார்ந்தால் நான் தீர்ப்புக் கொடுக்க முடியும்.

THIRU R. MARGABANDU : Sir, on a point of clarification . . .

THIRU J. JAMES : I am not yielding for the clarification. I am substantiating what I am stating. The former Chief Minister wanted to continue in office, but the Governor has dismissed him. The Chief Minister's place is most powerless. Hereafter, I am sure that no Minister would pay encomiums to the Chief Minister.

(முற்பகல் 9-40)

*திரு க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தங்களிடத்திலே தரப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை என்ற கருத்திலே இருந்து, அந்த உரிமைப் பிரச்சினை இன்றையதினம் விவாதத்திலே இருந்து வேறு எங்கோ போய் விட்டது. அதிலே முதலமைச்சர் அவர்கள் எல்லா அதிகாரங்களையும் படைத்தவர் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. மனோகரன் அவர்களும், எந்த அதிகாரமும் இல்லை என்று உரிமைப் பிரச்சினையைத் தந்தவர்களும் குறிப்பிட்டார்கள். எந்த அளவுக்கு அதிகாரம் இருக்கிறது என்பது அரசியல் சட்டத்திலேயே வரையறுக்கப்பட்டிருக்கிறது. அந்த வரையறுக்கப்பட்ட அதிகாரம் முதலமைச்சருக்கு சட்டப்படி இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அமைச்சர்களை அவர் நியமிக்கிறார் என்ற ஒரே காரணத்தாலேயே இந்த அமைச்சர் பதவி எனக்குப் போட்ட பிச்சை' என்று சொல்வது அமைச்சரவையினுடைய தரத்தைக் குறைத்ததன் மூலமாக சட்டமன்றத்தினுடைய தரத்தையும் குறைக்க அது வழி செய்து விடுகிறது என்ற காரணத்தாலே அந்த சொல்லை பயன்படுத்திய அமைச்சருக்கும் அது பெருமையாக இல்லை; அதனால் சட்டமன்றத்திற்கும் அது பெருமையாக இல்லை என்று தான், இந்த உரிமை மீறல் பிரச்சினையிலே நான் என் கட்சியின் சார்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

THE HON. THIRU K. MANOHARAN : At the very outset, Itold you that I would never enter into the merits of the case. His misrepresentation of the Article of the Constitution has been pointed out.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தை நான் ஏற்கெனவே பெற்று இருக்கிறேன். எனது தீர்ப்பை இப்போது வழங்குகின்றேன். மாண்புமிகு சமூகநல அமைச்சர் அவர்கள் ''முதல்வர் போட்ட பிச்சை'' என்ற கூற்றை ''இரத்தல்'' என்ற பொருளில் கூறினார் என்று எடுத்துக்கொள்ளாது, எளிமைப் பொருளாக ''humility'' என்று எடுத்துக்கொள்ளவேண்டும். மேலும் அரசியல் அமைப்புச் சட்டம், 164-வது பிரிவின் கீழ், ஆளுநரால் முதல் அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்கள் பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களும் நியமிக்கப்படுகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, அமைச்சர்கள் நியமிக்கப்படுவது முதல் அமைச்சர் அவர்களின் முழு அதிகாரமும், விருப்பமும் ஆகும். ஆகவே, ''முதல் அமைச்சர் போட்ட பிச்சை'' என்பதை இழிவாக எடுத்துக் கொள்ளாமல், அமைச்சர் அவர்களின் எளிமையை எடுத்துக் காட்டுவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(4) (அ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி பற்றியும், அக் கல்லூரி மூடப்பட்டிருப்பது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பாளையங்கோட்டையிலுள்ள இந்திய முறை அரசு மருத்துவமனை கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி பற்றியும் அக்கல்லூரி மூடப்பட்டிருப்பது பற்றியும், அதனால் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் விவாதிக்க பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, துரைமுருகன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி ஒற்றிவைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதை சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா. திரு. துரை முருகன் அதே கட்சியைச் சேர்ந்தவர். ஆதலால் அவர் தனியாக விளக்கம் அளிக்க வேண்டாம்.

திரு, ஜே. ஜேம்ஸ் : திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையிலுள்ள இந்தியமுறை அரசு மருத்துவமனை கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி பற்றியும், அக்கல்லூரி